பக்கங்கள்: 10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 11 சனிக்கிழமை 25.06.2022 கதிர் 232

### இனி இது ரகசியம் அல்ல!

இவ்வளவு நெருக்கடிகள், பின்னடைவுகளுக்கு பின்னரும் தம்மைத் திருத்திக் கொள்பவராக நாட்டின் ஜனாதிபதி இல்லை. இதுதான் நாட்டின் இன்றைய துரதிர்ஷ்ட நிலைமை.

பாதுகாப்புத் துறை அதிகாரிகளை வைத்து,

2

# பொருளாதாரம் சீரானாலேயே இனித் தேர்தல்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பு,ஜூன் 25

தற்பொழுது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பின்னடைவுக்கு மத்தியில், அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2

## கடன் அட்டை வட்டி விகிதமும் உயரப் பாய்ந்தது

இலங்கையில் உள்ள பல வணிக வங்கிகள் தமது கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளன்.

தற்போதைய நிலையில் பல வணிக வங்கிகள் தமது கடன் அட்டைகளுக்கான வட்டி விகிதத்தை 30 வீதமாக அதிகரித்துள்ளன.

2

## தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

ஆசிரியர்களின் போக்குவரத்துத் தொடர்பில் தமக்கு முறையான அறிவிப்பு இல்லையென்றால் திங்கட்கிழமை முதல் பாடசாலைக்குச் செல்ல முடியாது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

2

## மானிப்பாய் பகுதியில் 600 லீற்றர் டீசலை பதுக்கியவர் கைது



மானிப்பாய் சோதி வேம்படி பாடசாலைக்கு அண்மையாக உள்ள வீடொன்றில்

2

## திங்களன்று வருகின்றது அமெ. திறைசேரிக் குழு

பொருளாதார ரீதியில் முற்றாக வீழ்ச்சியடைந்து விட்ட இலங்கையை மீட்கும் சர்வதேச நகர்வுகளின் ஓர் அங்கமாக வரும் திங்கட்கிழமை அமெரிக்க திறைசேரி திணைக்கள அதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ள நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கை குறித்து உண்மைத் தகவல் அறிக்கையிடலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் சிறப்புக்குழு ஒன்று நேற்று முன் தினம் இலங்கையில் பேச்சு

2

## நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியுடன் ஆராய்வு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

2

## பெற்றோல் தாங்கிக் கப்பலின் வருகை மேலும் தாமதமாகுமாம்




நாற்பதாயிரம் மெட்ரிக் தொன் பெற்றோலுடன் இலங்கை வர வேண்டிய தாங்கிக் கப்பலின் வருகை மேலும் தாமதமடையக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர்

2

## இலங்கையின் ஐ.நா. தூதுவருக்கு அமெ. நீதிமன்றம் அழைப்பாணை!



தனக்குரிய பிணைமுறிக் கொடுப்பனவை இலங்கை செலுத்தத் தவறியமையை ஆட்சேபித்து இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவின் ஹமில்டன் ரிசேர்வ் வங்கி தாக்கல் செய்துள்ள வழக்கைத் தொடர்ந்து அமெரிக்க சமஷ்டி நீதிமன்றம் ஐ.நாவிற்கான இலங்கைத் தூதுவர் மொஹான் பீரிஸிற்கு அழைப்பாணை விடுத்துள்ளது.

பிணைமுறிக்கான கட்டணங்களை

2

## ஊழல் வழக்கில் இருந்து குமார வெல்கம விடுதலை



முன்னாள் அமைச்சர் குமார வெல்கமவிற்கு எதிராக லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் போக்குவரத்து அமைச்சராக இருந்த வேளையில், இலங்கை போக்குவரத்துச் சபையில், இல்லாத

2

## அமைச்சரானார் தம்மிக



முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக தம்மிக்க பெரேரா பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டுள் ளார்.

ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் நேற்று மாலை பதவிப் பிரமாணம் செய்துக் கொண்டார்.

தம்மிக்க பெரேரா நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா

2

## பிள்ளையானின் கைவரிசை அவரின் சகாவால் அம்பலம்?

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ஒருவர் முக்கிய கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான சம்பவங்கள் தொடர்பில், ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தகவல் வழங்கியுள்ளார் என ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த செய்தி தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மறுப்புத்

2



# இணுவில் கிழக்கில் மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்குப் பகுதியில் நேற்றைய தினம் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இதன்போது சதீஸ் யோகராயா என்னும் 26 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

வீட்டில் இருந்த நீர் இறைக்கும் மோட்டார் அறைக்குச் சென்றவர் அந்த அறையில் இருந்த மின் வயரில் இருந்த மின் கசிவில் அகப்பட்டு உயிரிழந்தார்.

இளைஞனின் சடலம் போதனா வைத்தியசாலையில் பிரதே பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்து, அதனால் சர்வதேச ரீதியில் பெரிதும் வாங்கிக் கட்டிக்கொண்டார் கோட்டாபய. எனினும் சரியான பாடம் படித்த பின்னரும் அவர் திருந்துபவராக இல்லை. அதுதான் விசனத்துக்குரியது.

முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ஜயநாத் கொலம்பகேயை வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமித்து, நாட்டின் வெளிவிவகாரத் துறையையே போட்டு அடித்தார் கோட்டாபய.

நிலைமை கழுத்துக்கு வந்ததும் – சர்வேதேச விவகாரங்களைக் கையாண்டமையில் தமது முரட்டுத்தனமான படைத்துறை அணுகுமுறைப் போக்கு வேறு, சர்வதேசத்தைக் கையாளும் ராஜதந்திர அணுகுமுறை வேறு என்பதைப் பட்டறிந்து, கையைச் சுட்டுப் படித்துக் கொண்ட பின்னர், அந்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் கடற்படைத் தளபதியைத் தூக்கினார் அவர். மூன்று தசாப்த காலம் வெளிவிவகாரத் துறையில் இருக்கும் மூத்த அதிகாரியான அம்மணி ஒருவரை அப்பதவியில் நியமித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய உரிய பாடம் படித்துத் திருந்தி விட்டார் என்றுதான் எல்லாரும் நம்பினர். ஆனால் அவர் திருந்தவே இல்லை என்று இப்போது தோன்றுகின்றது. இன்னமும் விட்டகுறை தொட்டகுறை என்று அந்த முன்னாள் கடற்படைத் தளபதியைத்தான் தமது வெளிவிவகார கையாள்கைக்குத் தம்முடன் கூட்டித் திரிகிறார் ஜனாதிபதி.

இலங்கையின் இன்றைய இக்கட்டு நிலையில் சர்வதேசத்தின் – குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் – உதவி இலங்கைக்கு மிக மிக அவசியமாகும். அந்த நாடுகளின் தூதுவர்களை ஜனாதிபதி நேற்று ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே, நெதர்லாந்து, ஜெர்மனி, ருமேனியா, துருக்கி, சுவிஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். ஜனாதிபதியுடன் பங்குபற்றியவர் அவரது வெளிவிகார அமைச்சின் செயலாளர் அல்லர். முன்னாள் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தான்.

நாட்டின் வெளிவிவகாரத்துறையைப் போட்டடித்துக் குழப்பியவரைத்தான் தனது வெளிவிவகாரத்துறை விடயங்களைக் கையாளப் பக்கத்தில் வைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டா. அவர் திருந்தவே மாட்டார் போலும்.

இதற்கிடையில் இன்னொரு கொசுறுத் தகவல்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவு இருந்த போதிலும் – இப்போதும் இருக்கின்ற போதிலும் – பிரதமர் பதவியைத் துறக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகி, அரசியல் ரீதியாகவும், செல்வாக்கு ரீதியாகவும் பல பின்னடைவுகளையும் இழப்புகளையும் சந்தித்து நிற்கும் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதன் காரணமாகத் தமது அரசியல் நடவடிக்கைகளைச் சுருக்கிக் கொள்வார் என்றுதான் பலரும் கருதினர். ஆனால் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்று அவர் தமது அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்து விட்டார் எனத் தெரிகிறது. நேற்று அவரும் முக்கிய ஐரோப்பிய நாடு ஒன்றில் தூதுவரைச் சந்தித்து இருக்கின்றார். அடுத்த வாரம் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் பல சந்திப்புக்களை அவர் மேற்கொள்ள இருக்கிறார் என்று தெரிகிறது.

கொஞ்சக் காலம் ராஜபக்ஷக்கள் அமைதியாக இருந்தார்கள். மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியமை போன்று விக்ரமாதித்தன் கதைதான் இங்கும் கட்டவிழப் போகின்றது போல...!

- மின்னல் -

## ஊழல் வழக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவியான பிரதித் தலைவர் எனும் பதவியை உருவாக்கி சம்பளம் வழங்கியதன் மூலம், அரசாங்கத்திற்கு சுமார் முப்பது லட்சம் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தினார் என அவருக்கு எதிராக லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது தாக்கல் செய்த இந்த வழக்கு, நேற்றுக் கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றம் அவரை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

## அமைச்சரானார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையானின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் நடராஜா ரவிராஜ் ஆகியோரின் கொலைகள், ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் உட்பட்ட பல விடயங்கள் தொடர்பில் முக்கிய தகவல்களையே, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் அந்த உறுப்பினர் வெளிப்படுத்தியுள்ளார் என அந்த ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி தொடர்பில் பிள்ளையானைத் தொடர்புகொண்டு வினவிய போது, வெளியான தகவல்களை அவர் மறுத்துள்ளார். அதுமட்டுமன்றி அரசியல் தஞ்சம் கோருவதற்காக எவரும், எதனையும் கூறலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்றிருக்கிறது. எனவே அதுபோன்ற ஒரு நிகழ்வாக இந்தத் தகவலும் இருக்கலாம் என்று பிள்ளையான் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் ஐ.நா. ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தாமை தொடர்பில் இலங்கைக்கு எதிராக ஹமில்டன் வங்கி கடந்த செவ்வாய்கிழமை நியூயோர்க்கில் உள்ள சமஷ்டி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது தெரிந்ததே.

## பெற்றோல் தாங்கிக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்திருக்க வெண்டிய அக்கப்பல் நேற்று இலங்கையை வந்தடையும் என அதன் வழங்குனர்களால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டிருந்தது..

ஆயினும், கப்பலின் வருகை மேலும் தாமதமடையும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாமதத்திற்குப் பொதுமக்களிடம் தாம் மன்னிப்புக் கோருகிறார் என எரிசக்தி அமைச்சர் ட்விட்டர் பதிவொன்றை மேற்கொண்டு தெரிவித்துள்ளார்.

## நாணய நிதியத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு உதவ எதிர்பார்த்துள்ளதாக பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

ஒரு வார காலம் இலங்கையில் தங்கியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு, ஊழியர்கள் மட்ட உடன்படிக்கையை எட்டுவது தொடர்பான கொள்கை அடிப்படையிலான விடயங்கள் குறித்து நீண்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றனது.

இதன்படி, பிரதமர் மற்றும் நிதியமைச்சு, மத்திய வங்கி உள்ளிட தரப்புகளின் பொருளாதார அதிகாரிகள் மற்றும் நிபுணர்களுடன் இக்குழு கலந்துரையாடல்களை நடத்தியதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடியுள்ளது.

## திங்களன்று வருகின்றது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தித் திரும்பிய நிலையில் இலங்கைக்கு வரும் அமெரிக்க திறைசேரி அதிகாரிகள இரண்டு நாடுகளுக்கும் இடையில் வரி ஒப்பந்ததை மையப்படுத்திய நகர்வுகளை மேற்கொள்ளக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான வழிகளத் திறப்பது குறித்து நகர்வுகள் இடம்பெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக இந்தோ – பசிபிக் பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பு நகர்வுகளுடன் இலங்கையை பொருளாதார ரீதியில் கையாள்வதற்குரிய முயற்சிகள் வொஷிங்டனால் எடுக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே திறைசேரி அதிகாரிகளின் இலங்கைப் பயணத்துக்கு முன்னோட்டமாக இலங்கை குறித்த உண்மைத் தகவல் அறிக்கையிடல் ஒன்றை அமெரிக்கா கடந்த 21 ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்குரிய கடன் கொடுப்பனவுகளில் அரசியல் இருக்காது என்றாலும், மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகளுக்கு இடமிருக்குமென பிரித்தானியா கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரம் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதன் பின்னரே தேர்தலை நடத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு பிரதமர் இதனை தெரிவித்தார்.

மேலும் மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டவுடன், பொருத்தமான 225 பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்வதற்குப் பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும், அவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொது மக்களுக்கு உள்ளது எனவும் பிரதமர் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடு முழுவதும் எதிர் கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க நாட்டுப் பிரஜை ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளமையுடன், அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடம் இருந்து அர்ப்பணிப்பை எதிர்பார்த்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு காணப்பட்டால் மட்டுமே உலக நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வரும் எனவும் பிரதமர் மேலும் கூறினார்.

அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டும் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

எனவே நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு, அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வெண்டும் எனவும் பிரதமர் அனைவரிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மானிப்பாய் பகுதியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறுநூறு லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளார் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

53 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக மானிப்பாய் பொலிஸ் நிலைத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

## தமிழர் ஆசிரியர் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் ஊடகங்களுக்கு அனுப்பிய செய்தியில் ஆசிரியர்களின் போக்குவரத்துக்கு ஏதாவது பொறிமுறையை உருவாக்குமாறு பல தடவைகள் அரசிடம், அமைச்சிடம் கோரிக்கை முன்வைத்தோம். அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

நாளுக்கு நாள் நெருக்கடிகள் அதிகரித்தே செல்கின்றன. பொது மக்களுக்கும் ஆசிரியர்களுக்கும் முரண்பாடுகள் உருவாக ஆரம்பித்து விட்டன. – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடன் அட்டை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடன் அட்டைகளுக்கான அதிகபட்ச வட்டி வீத வரம்பை நீக்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த ஏப்ரல் 08 ஆம் திகதி தீர்மானித்தது.

இந்த தீர்மானத்தை தொடர்ந்து, கடன் அட்டை வட்டி விகிதம் 18 வீதத்திலிருந்து 24 வீதமாகவும், தற்போது 30 வீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய தரவுகளின்படி, இந்த ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நாட்டில் செயலில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை 19 லட்சத்து 73 ஆயிரத்து 481 ஆகும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524

அருந்ததியின்
வரன் தேடுவோம் வாருங்கள்
திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

யாழ்ப்பாணம் 25/06/2022
Chelva Mahal
1229, Poonari Maraththady Kokuvil.
9.00 a.m -12.00 p.m

கொழும்பு 26/06/2022
Green Palace
30 W.A. Silva Mawatha, Colombo 06.
9.00 a.m -12.00 p.m

இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அடக்கப்பட்டோரின் குரல்

**கோட்டா ஆட்சிப் பீடத்துக்கு எதிரான மக்களின் எதிர்ப்புணர்வு கொந்தளிப்பாக வெளிப்பட்டு வரும் இவ்வேளையில், காலிமுகத்திடல் போராட்டம் குறித்துப் பெரிதும் சிலாகித்துப் பேசப்பட்டு வருகின்றது. ஆட்சிக்கு எதிரான மக்களின் ஒட்டுமொத்த உணர்வலைகளைத் தீரத்துடன் பிரதிபலிக்கும் போராட்டமாக அது இப்போது மெச்சப்படுவது தவறில்லை.**

**ஆனால், நீதிக்கான, நியாயத்திற்கான, அடிப்படை உரிமைகளுக்கான, எதேச்சாதிகார கொடுங்கோன்மை அடக்குமுறைக்கு எதிரான, துணிச்சலான போராட்டம் அங்கிருந்துதான் – இப்போதுதான் – ஆரம்பமாகி இருக்கின்றது என்ற சாரப்பட வெளிப்படுத்தப்படும் கருத்தியலுக்கு சரியான பதிலடி கொடுத்து இருக்கின்றார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.**

**“காலிமுகத் திடல் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், போராட்டத்தை நாம் அங்கிருந்து கற்றோம் என நீங்கள் நினைக்க கூடாது. நீங்கள் பாற்சோறு உண்டு கொண்டாடிய வேளையிலும் போராடியவர்கள், நாங்கள். நாம் மதவாதத்தால், இனவாதத்தால், அரச பயங்கரவாதத்தால் ஒடுக்கப்பட்டு வரும் ஓர் இனம். இந்த அநீதிகளுக்கு எதிராக நாம், இன்று, நேற்று அல்ல, பல்லாண்டுகளாகப் போராடி வருகிறோம். நாம் எப்போதும் ஜனநாயகப் போராளிகள்தான். அரசியலில் இருந்து மதம் அகற்றப்பட வேண்டும். இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக அறிவிக்கப்பட வேண்டும். அதுவரை எம் ஜனநாயக போராட்டம் தொடரும்.”**

**– இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார் மனோ கணேசன்.**

**இலங்கையில் இத்துணை காலம் அடக்குமுறைக்கு எதிராகத் தங்கள் உயிரையும் உடைமைகளையும் வாழ்வியலின் சகல வசதிகளையும் கொடுத்துத் தீரத்துடன் போராடி வரும் சிறுபான்மை இனங்களின் ஒட்டுமொத்தக் குரலாக அவர் கருத்துப் பிரதிபலித்திருக்கிறார்.**

**தென்னிலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களையும் வைத்துக்கொண்டு அவர் கூறிய கருத்துக்கள், தனித்து அவரதும், அவரது முற்போக்குக் கூட்டணியினதும் கருத்து நிலைப்பாடு அல்ல.**

**அது, இந்த இலங்கைத் தீவில் மதத்தின் பெயராலும், மொழியின் பெயராலும் முன்னெடுக்கப்படும் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்து நின்ற, கிளர்ந்து நிற்கின்ற, அடக்கப்பட்ட ஒவ்வொரு இனத்தினதும் ஒட்டுமொத்த குரல்தான். இனவெறி, மதவெறி என்ற பேரினவாத அடக்கு முறையிலிருந்து தென்னிலங்கைப் பெரும்பான்மை பௌத்த, சிங்கள மக்கள் வெளிவரும் வரையில் சிறுபான்மை மக்களின் அந்த போராட்ட உணர்வு கனன்று, கொப்பளித்துக் கொண்டுதான் இருக்கும் என்பதை மனோ கணேசன் அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார்.**

**தாம் ஒரு ஜனநாயகப் போராளி என்று உரிமையுடன் கூறும் முழுத் தகைமை அவருக்குண்டு.**

**இருபுறத்திலும் கொடூர போரின் ஆயுதங்கள் கனன்று கொண்டிருந்தபோது, துப்பாக்கிகள் வெடித்துக் கொண்டிருந்தபோது, பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருந்தபோது, வெள்ளை வான் கடத்தல்களும் ஆள்கள் காணாமலாக்கப்படுதலும் சர்வசாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருந்த போது, அவற்றுக்கு மத்தியில் நீதி, நியாயம், உரிமை, வாழ்வியல் கௌரவம் போன்றவற்றை வேண்டி ரவிராஜ், மகேஸ்வரன் போன்ற தியாகிகளுடன் துணிச்சலாகக் களத்திலிருந்து – ஜனநாயகத்தை மட்டும் காப்பாரணாகக் கொண்டு – போராடியவர் மனோ கணேசன். அவரின் இந்த குரல் – சீற்றம் – நீதி, நியாயமான உரிமைகளைக் கோரும் ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தின் வெஞ்சினத்தின் வெளிப்பாடு.**

# வடமாகாண வைத்தியர்களின் சம்பளம் முறையற்று குறைப்பு

## மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்போது வைத்தியர்கள் பணியாற்றி வரும் நிலையில், வடமாகாணத்தில் அவர்களுக்கான சம்பளம் குறைக்கப்பட்டு முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் கதிரமலை உமாசுதன் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பல்வேறு நெருக்கடிகள் தற்போது நாட்டில் காணப்பட்டாலும் கூட அதை எதிர்கொண்டு வைத்தியர்கள் தங்களால் இயன்றவரை பணியாற்றி வருகின்றனர்.

நாம் பல்வேறு கோரிக்கைகளை உயர் அதிகாரிகளுக்கு முன்வைத்த போதும் அதனைக் கருத்தில் கொள்ளாது வடமாகாணத்தில் வைத்தியர்களின் சம்பளத்தை குறைத்துள்ளதுடன் முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

சம்பளம் வழங்கப்பட முன்னரே உரிய அதிகாரிகளுடன் எழுத்து மூலமாக நாம் கோரிக்கை விடுத்த போதும் உங்களது சம்பளம் குறைக்கப்படாது என்று அவர்களால் எமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

சம்பளம் வழங்கப்படாமல் விடுவது தொடர்பாகவோ சம்பளம் குறைப்பு தொடர்பாகவோ நிறுவனங்கள் முன்னரே அறிவிக்க வேண்டும் என்பது ஸ்தாபன விதி. ஆனால் எதுவும் பின்பற்றப்படாமல் இங்கு சம்பளம் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்பட்டு சுகாதார அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோர்களுடன் கலந்துரையாடிய போது அத்தியாவசிய தேவையான சுகாதார துறைக்கு சம்பளங்கள் குறைக்கப்படாது என வாக்குறுதியளிக்கப்பட்டது.

எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும் நிலையே காணப்படுகின்றது. அத்தியாவசிய சேவை என்ற அடிப்படையில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு முன்னுரிமை காணப்படவில்லை. ஊடகங்களை அவதானித்தால் எரிபொருள் நிலையங்கள் எங்குமே எமக்கு மதிப்பளிக்கபடாத விரட்டியடிக்கப்படுகின்ற நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான நெருக்கடிக்குள் நாம் எமது பணிகளை மேற்கொள்ளும் போது சம்பள குறைப்பு மேற்கொண்டு சம்பளத்தை வழங்காமல் விட்டால் நாம் என்ன செய்வது? எமக்குரிய சம்பளம் முழுமையாக வழங்கப்படாமல் விட்டால் நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைக்கு தள்ளப்படுவர். நாடு சுடுகாடாகுவதையா இந்த அரசாங்கம் விரும்புகின்றது.

மிகவும் சிக்கலான காலத்தில் நாம் எதிர்கொண்டு சேவைகளைச் செய்யும் போது சம்பள குறைப்பு மேற்கொள்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. ஆகவே உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனில் நாம் எமது தாய்ச்சங்கத்துடன் கலந்துரையாடி எதிர்வரும் காலத்தில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக உள்ளோம். – என்றார்.

# யாழில் பத்திரிகைகள் முடங்கும் அபாய நிலை!

யாழ்ப்பாணத்தில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பத்திரிகைகள் முடங்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டு 3 பத்திரிகைகள் அச்சு பதிப்பாக வெளிவருகின்றன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மேற்படி பத்திரிகைகள் விநியோகத்தில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன.

பத்திரிகை விநியோக பணியில் ஈடுபடும் பணியாளர்கள் எரிபொருள் இன்மையால் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதால் விநியோக பணிகள் பாதிக்கப்படவுள்ளன. அதனால் பத்திரிகைகள் முடக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பில் பத்திரிகை நிறுவன தலைவர்கள், ஆசிரியர் பீடத்தினர் வடமாகாண ஆளுநர், மாவட்ட செயலர் ஆகியோருடன் கலந்துரையாடிய போதிலும் சாதகமான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை யாழில் மூன்று தொலைகாட்சி நிறுவனங்கள், வானொலி சேவைகள் என்பன உள்ளடங்கலாக 10 இற்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்கள் உள்ளன.

அவற்றில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள், ஊடக பணியாளர்கள் என பலரும் எரிபொருள் தட்டுப்பாட்டால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதேபோன்று யாழில் இருந்து கொழும்பில் உள்ள ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

# விலங்கு, விசர் நாய்க் கடிகளுக்கான தடுப்பு மருந்துகள் இன்மையால் மடுவுக்குவரும் பக்தர்கள் அவதானம்தேவை!

## மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு




**வைத்தியசாலைகளில் தற்பொழுது விலங்கு மற்றும் விசர் நாய் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் மடு பெருவிழாவுக்கு வருவோரின் பாதுகாப்புக் கருதி நாய்கள் அப்பகுதிக்குள் உலாவுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் தெரிவித்தார்.**

**எதிர்வரும் ஆடி மாத மடு பெருவிழா தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.விநோதன் கருத்து தெரிவிக்கையில் –**

**எதிர்வரும் ஆடி மாத மடு அன்னை பெருவிழாவுக்கு இம்முறை கட்டுப்பாடு அற்ற முறையில் பக்தர்கள் வருகை தர இருக்கின்றார்கள்.**

**இம் மடுப் பகுதி ஒரு கானகப் பகுதியாக இருப்பதால் மக்களும் இந்தப் பகுதிக்கு வருகை தரும்போது கட்டாக்காலி நாய்களும் காட்டுப் பகுதிகளுக்குள் இருந்து வருகை தரக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.**

**ஆகவே தற்பொழுது வைத்தியசாலைகளில் விலங்கு மற்றும் விசர் நாய் கடிகளுக்கான தடுப்பு மருந்து வகைகள் இன்மையால் நாய் தொல்லைகளிலிருந்து இப்பகுதிக்கு வரும் மக்களை பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.**



# விரைவான பொருளாதார மீட்சிக்கு இலங்கைக்கு உதவ இந்தியா தயார்!

## இந்திய உயர் மட்டக் குழு நேரில் உறுதியளிப்பு

முதலீடுகள், இருதரப்பு இணைப்புகள் மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் கொழும்பின் விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவ புதுடெல்லி தயாராக இருப்பதாக, வெளியுறவுச் செயலாளர் வினய் குவாத்ரா தலைமையிலான – இந்திய நிதி அமைச்சின் நான்கு மிக உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட தூதுக்குழு, வியாழன் அன்று இலங்கைத் தலைமைக்கு உறுதியளித்தது.

பிரதிநிதிகள் குழுவில் நிதி பொருளாதார விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் செயலாளர் அஜய் சேத், தலைமைப் பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி. ஆனந்த நாகேஸ்வரன் மற்றும் வெளிவிவகார அமைச்சின் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் இணைச் செயலாளர் கார்த்திக் பாண்டே ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை கொழும்பில் சந்தித்தனர்.

இந்தியாவின் சமீபத்திய பொருளாதார உதவி 350 கோடி டொலர்களாகும்.

தவிரவும், இந்த ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும், பிராந்திய மற்றும் பன்முக அமைப்புக்கள் உட்பட மற்ற மன்றங்களிலும் புதுடில்லி கொழும்பை ஆதரித்தது.

குவாத்ரா, சேத் மற்றும் நாகேஸ்வரன் ஆகியோர் சகிதம் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில் –

‘இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தியாவின் தற்போதைய ஆதரவு’ குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் ’ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல்களை’ நடத்தினர் என்றார்.

இந்த சந்திப்பின் போது, முதலீடுகளை ஊக்குவித்தல், இணைப்பு மற்றும் பொருளாதார தொடர்பை வலுப்படுத்துதல் மூலம் இலங்கைக்கு விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவ இந்தியா தயாராக இருப்பதாக தூதுக்குழுவினர் அடிக்கோடிட்டுக் காட்டினர்.

(அவர்கள்) இந்தியாவின் அண்டை நாட்டுக்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கு இணங்க இலங்கையின் மையத்தன்மையை மீண்டும் வலியுறுத்தினர். இந்தியா – இலங்கை உறவுகளை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை இரு தரப்பினரும் மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டனர்” – என்றார் பாக்சி.



கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் பேச்சுவார்த்தை ‘வெளிப்படையான, சுமுகமான மற்றும் ஆக்கபூர்வமான முறையில்’ நடைபெற்றதாகக் கூறியது.

அதன் ஓர் அறிக்கையில் –

‘அண்டை நாட்டுக்கு முன்னுரிமை’ கொள்கை மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி (SAGAR திட்டம்) ஆகிய பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் கீழ் இலங்கைக்கு 350 கோடி அமெரிக்க டொலர்க ளுக்கும் அதிகமான பொருளாதார, நிதி மற்றும் மனிதாபிமான உதவிகள் மூலம் வழிகாட்டப்பட்டன என இந்திய தூதுக்குழு அடிக்கோடிட்டுக் காட்டியது.





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்த போது, இந்திய – இலங்கை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான அவரின் அர்ப்பணிப்புக்காக இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியத் தரப்பு நன்றி தெரிவித்தது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் இந்தியாவின் தற்போதைய ஆதரவு குறித்து இரு தரப்பும் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை பரிமாறிக் கொண்டன என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின் போது, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பொருளாதார மீட்சியை அடைவதற்கான முயற்சிகள் குறித்து இரு தரப்பும் ஆழமான கலந்துரையாடலை மேற்கொண்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், உள்கட்டமைப்பு, இணைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதாரத் தொடர்புகளை ஆழமாக்குதல் உள்ளிட்ட துறைகளில் இந்தியா – இலங்கை முதலீட்டுப் பங்காளித்துவத்தை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை இரு தரப்பும் எடுத்துரைத்தன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் குவாத்ரா இலங்கை வெளிவிவகாரச் செயலாளரான அருணி விஜேவர்தனாவுடனும் ஒரு தனி சந்திப்பை நடத்தினார். அங்கு அவர்கள் இராஜதந்திர ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும், இருதரப்பு விஜயத்தை முன்னெடுப்பதற்கும் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

“பயங்கரவாத ஒழிப்பு, கடல் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம், மனிதாபிமான உதவி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, வர்த்தக ரீதியான உறவுகள் மற்றும் இரு நாட்டு மக்களிடையிலான தொடர்புகள் உள்ளிட்ட விடயங்களில் கடந்த சில ஆண்டுகளாக இந்திய மக்களாலும் அரசாங்கத்தாலும் வழங்கப்பட்டுவரும் உறுதியான ஆதரவை இலங்கை தரப்பினர் மெச்சியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

‘‘இலங்கை பிரத்தியேக டிஜிற்றல் அடையாள முறைமை திட்டம் உட்பட 60 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமான நன்கொடையுடன் இந்திய அரசாங்கத்தால் 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான அபிவிருத்தி உதவி வழங்கப்பட்டுள்ளமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கும் பாரிய பங்களிப்பினை வழங்கும் நாடாக இந்தியா தொடர்ந்தும் உள்ளது.

“பிராந்திய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட அமைப்புகளின் பல்வேறு மாநாடுகள் உட்பட்ட பல தொடர்ச்சியான சந்தர்ப்பங்களிலும் இவ்வருடம் மார்ச்சில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களின் போதும் இந்தியாவால் வழங்கப்பட்ட ஆதரவினை இலங்கை தரப்பினர் வரவேற்றிருந்தனர். கொவிட்டுக்கு பின்னரான சூழலில் பொருளாதார நடவடிக்கைகளின் இயல்புநிலையினை உறுதிப்படுத்துவதற்கு ஏனைய நாடுகளும் இலங்கைக்கு உதவிசெய்யும் வகையில் இந்திய தலைமைத்துவம் மேற்கொண்டிருந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியிருந்தனர்.” – என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**(மூலம்: இண்டியன் எக்ஸ்பிரஸ்)**




# பஸ்களை தள்ளிக்கொண்டுவந்து பருத்தித்துறையில் போராட்டம்





யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் பருத்தித்துறைசாலை (டிப்போ) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரவு நேரங்களில் கள்ள சந்தையில் விற்பனை செய்வதற்கு டீசல் வழங்கப்படுவதாகவும், தமக்கு உரிய ஒழுங்கில் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இருந்து நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தமது பஸ்களை, பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு தள்ளிக்கொண்டு வந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசலை பெற்றுக்கொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால், எமக்கு உரிய ஒழுங்குமுறைகளில் பருத்தித்துறை சாலை (டிப்போ) முகாமையாளர் டீசலை விநியோகிக்கவில்லை. இரவு நேரங்களில் கள்ள சந்தை வியாபாரிகளுக்கு பெருமளவான டீசல் வழங்கப்படுகின்றது.

பயணிகள் சேவையில் ஈடுபடும் எமக்கு டீசல் வழங்க இழுத்தடிப்புகள் செய்து உரிய ஒழுங்கில் டீசல் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டியே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணம் கோண்டாவில் சாலை (டிப்போ) எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தமக்கு டீசல்கள் வழங்கப்படுவதில்லை என தனியார் பஸ் சாரதிகள் போராட்டம் நடத்தி இருந்தனர்.

அவர்களுடன் யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் பேச்சுக்களை நடாத்தி உரிய ஒழுங்கில் டீசல் பெற்று தர நடவடிக்கை எடுப்பேன் என உறுதி அளித்து இருந்த நிலையில், பருத்தித்துறைசாலைக்கு (டிப்போ) எதிராக போராட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்க பன்னாட்டு கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் முறைமை அறிமுகம்

வெளிநாட்டு நாணயக்கொடுக்கல், வாங்கல்களைக் கண்காணிப்பதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு பன்னாட்டு கொடுக்கல், வாங்கல் அறிக்கையிடல் முறைமையை இலங்கை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

அனைத்தையும் உள்ளடக்கிய நாடுகளுக்கு இடையிலான கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயக்கொடுக்கல், வாங்கல் கண்காணிப்பு முறைமையை தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம் இனங்காணப்பட்டதையடுத்து, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றின் பங்களிப்புடன் இந்த பன்னாட்டு கொடுக்கல், வாங்கல் அறிக்கையிடல் முறைமையைத் தாம் அறிமுகப்படுத்தியிருப்பதாகமத்தியவங்கிதெரிவித்துள்ளது.

பன்னாட்டு கொடுக்கல், வாங்கல் அறிக்கையிடல் முறைமை நாடுகளுக்கு இடையிலான கொடுக்கல், வாங்கல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நாணயக்கொடுக்கல், வாங்கல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய தரவுச்சேகரிப்பு முறைமையாகக் காணப்படுவதுடன், தற்போதைய தரவுச்சேகரிப்பு முறைமைகளில் உள்ள இடைவெளியை சீர்செய்வதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இதன்மூலம் புள்ளிவிவரங்களைத் தயாரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றுக்கு அவசியமான விவரங்கள் வழங்கப்படும் என்பதுடன், அது பல்வேறு அம்சங்களிலும் கொள்கை உருவாக்கத்துக்குத் துணைபுரியும்.

அத்தோடு ஏற்றுமதிப்பெறுகைகள், இறக்குமதிகள், தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு வர்த்தகக்கொடுக்கல், வாங்கல்கள், தொழிலாளர் பணவனுப்பல்கள், நிதியியல் கணக்குக் கொடுக்கல், வாங்கல்கள், பல்வேறு புள்ளவிவரவியல் தரவுகளை உள்ளடக்கிய சென்மதி நிலுவைப்புள்ளிவிவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு பன்னாட்டு கொடுக்கல், வாங்கல் அறிக்கையிடல் முறைமை துணைபுரியும்.

அதுமாத்திரமன்றி கல்வி, மருத்துவம், சுற்றுலா உள்ளிட்ட ஏனைய நோக்கங்களை முன்னிறுத்தி இடம்பெறும் நாட்டிலிருந்தான வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சல்களின் மூலங்கள் போன்ற எதிர்காலக்கொள்கைத் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கின்ற தரவுகளும் இந்த முறைமையில்உள்ளடக்கப்படும். அந்தவகையில் பன்னாட்டு கொடுக்கல், வாங்கல் அறிக்கையிடல் முறைமையின் முதலாவது கட்டம் இம்மாதம் 1 – 21 ஆம் திகதிவரை செயற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாரிய போஷாக்கின்மைக்கு நாடு முகங்கொடுத்துள்ளது!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு பாரிய போஷாக்கின்மைக்கு முகங்கொடுத்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அந்த சங்கத்தின் ஊடகக் குழு உறுப்பினர் வைத்திய கலாநிதி பிரசாத் கொலம்பகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டுக்கான அத்தியாவசிய மருந்துகளை இந்தியச் சந்தையில் இருந்து கொள்வனவு செய்யுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் வைத்தியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் அவற்றைக் கொள்வனவு செய்யுமாறு வைத்தியர்கள் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்தநிலையில் அதனை பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** எல்லாம் தெரிந்தவர் போல் பலவற்றையும் பேசுகிறீர்கள். முடிந்தால் 'ஏரியா 51' பற்றி ஏதாவது சொல்லுங்கள் பார்க்கலாம்?

**பதில்:-** உங்களுக்கு ஏரியா 51 பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? அல்லது எனக்கு அது பற்றித் தெரியுமா என்பது பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா? எப்படியும் இருந்துவிட்டுப் போகட்டும்! முக்கியமான ஒரு விடயம் பற்றிச் சொல்ல வாய்ப்பளித்திருக்கிறீர்கள். அதற்கு முதலில் உங்களுக்கு நன்றி.

உலகில் இன்று பலரதும் கவனத்தையும் ஈர்த்து வரும், அமெரிக்காவில் இருக்கும் ஓர் நிலப்பகுதிக்கான பெயர்தான் 'ஏரியா 51' என்பது. அமெரிக்காவில் உள்ள 'நெவோடா' பாலைவனத்தில் பொதுமக்கள் அணுகவும் முடியாதவாறு அமைக்கப்பட்டிருக்கும் ஒரு நிலப் பகுதிக்குத்தான் ஏரியா 51 எனும் இப் பெயர் இடப்பட்டிருக்கிறது. 1947இல் அமெரிக்க, ரஷ்ய நாடுகளுக்கிடையே இருந்த கடும் பகைக்கு மத்தியில், ரஷ்யாவை விமானம் மூலம் உளவு பார்ப்பதற்காக அமெரிக்காவால் அமைக்கப்பட்ட ஒரு நிலப் பகுதியாகத்தான் ஆரம்பத்தில் இது கருதப்பட்டது. பின்னாளில் இந் நிலப் பகுதி வெளிக்கிரகவாசிகளான 'ஏலியன்ஸ்' பற்றிய ஆய்வுப் பகுதியாக மாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தப் பகுதிக்கு விமானப் போக்குவரத்தாலன்றி நிலத்தின் வழியாக யாரும் செல்ல முடியாதாம். இப் பகுதிக்குத் தினமும் இருபதுக்கு மேற்பட்ட விமானங்கள் சென்று வருகின்றனவாம். Janet (ஜேனட்) என்கின்ற விமான நிறுவனத்திற்குச் சொந்தமான விமானங்கள் மட்டும்தான் அங்கு செல்லமுடியுமாம். மற்ற எந்த விமானமும் அங்கு செல்ல முடியாது என்கிறார்களாம். தினமும் ஏரியா 51 இல் வேலை செய்வதற்காக 1,000 பேர் இந்த விமானங்களின் மூலம் அங்கு அழைத்துச் செல்லப்படுகிறார்களாம். ஆனால் அங்கு போய்வருகிறவர்கள் பற்றிய எல்லா விவரமும் இரகசியமாய் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

1947இல் நியூமெக்சிக்கோவில் ஒரு மிகப் பெரிய பறக்கும் தட்டு விபத்துக்குள்ளாகி விழுந்ததாம். அந்த விபத்து நிகழ்ந்த சில நிமிடங்களுக்குள்ளேயே அமெரிக்க விஞ்ஞானிகளும், அமெரிக்காவின் புலனாய்வுத் துறையான சி.ஐ.ஏ.நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டார்களாம். இது பலரும் அறிய நடந்த விடயம் என்கிறார்கள். ஆனால் மறுநாளே அமெரிக்க அரசாங்கம் அங்கு விழுந்தது ஒரு 'வெதர் பலூன்' தான் என்று கூறி, அந்த விடயத்தையே அவசர அவசரமாக மூடி மறைத்து விட்டதாம்.

அன்றிலிருந்து வெளிக் கிரகவாசிகள் பற்றிய ஆய்விடமாகத்தான் அமெரிக்கா இந்த ஏரியா 51 இடத்தைப் பயன்படுத்துவதாகப் பலரும் சொல்கிறார்கள். இங்கு வெளிக்கிரகங்களிலிருந்து பூமிக்கு வந்த பல பறக்கும்




தட்டுக்களும், 'ஏலியன்களும்' கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன எனவும் ஊகச்செய்திகள் பல, நீண்ட காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது. இந்த நிலப் பகுதிக்கு 5 கிலோமீற்றருக்கு அப்பால் வைக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு வேலியைத் தாண்டி எவரும் இங்கே உள்ளே நுழைய முடியாதவாறு கடுமையான இராணுவப் பாதுகாப்பு அமைக்கப்பட்டிருக்கிறதாம். இங்கு பறக்கும் தட்டுக்கள் பல வந்து போவதைத் தாங்கள் கண்டுள்ளதாகவும் அயலில் வாழும் மக்கள் பலரும் சொல்லி வருகிறார்கள்.

இந்தப் பகுதியை அமெரிக்கா பாதுகாத்து வரும் விதத்தைப் பார்க்க, இங்கு ஏதோ பெரிய மர்மம் இருப்பது மட்டும் தெளிவாய்த் தெரியவருகிறது. அதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சொல்லலாம். 1997 ஆம் ஆண்டு அமெரிக்காவின் மிகப் பிரபலமான ஒரு 'ரேடியோ ஸ்ரேஷனின்' 'லைவ் ஷோவுக்குத்' திடீரென ஒரு 'ரெலிபோன் கோல்' வந்திருக்கிறது. அந்தக் 'கோலில்' பேசிய குரல் 'நான் ஏரியா 51 லிருந்து பேசுகிறேன். ஒரு பெரிய பிரச்சினை இந்த நாட்டிற்கு வர இருக்கிறது. இங்கு என்ன நடக்கிறது என்று தெரியுமா?' என்று பேசத் தொடங்கி இருக்கிறது. நேரடி நிகழ்ச்சி என்றபடியால் அதனை பல லட்சம் பேர் ஆர்வத்துடன் கேட்டிருக்கிறார்கள். அப்போது சில நொடிகளுக்குள் அந்த 'ரெலிபோன் கோல் "கட்' பண்ணப்பட்டதோடல்லாமல் அந்த 'ரேடியோ ஸ்ரேஷனின்' தொடர்பும் முழுமையாக அணைக்கப்பட்டதாம். அந்தச் சம்பவத்தால், அரசினது ஏதோ ஒரு மர்ம இரும்புக்கரம் அந்த இடத்தைப் பற்றிய செய்தியை மிக நுட்பமாகப் பாதுகாத்து




வரு வது தெரியவந்திருக்கிறது.

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு ஏரியா 51க்குள் நுழைய விரும்புவோர் பதிவு செய்யலாம் என்று ஓர் அறிவிப்பு இணையத்தினூடு வெளிவர இலட்சக்கணக்கான இளைஞர்கள் தம் பெயரை அதில் பதிவு செய்தார்களாம். அண்டை அயல் ஊர் களிலுள்ள 'ஹோட்டல்கள்' எல்லாம்கூட 'புக்' செய்யப்பட்டதாம். குறித்த நாளில் ஏரியா 51 பகுதிக்குள் எல்லாருமாக நுழையப் போவதாக வந்த செய்திகளைப் பார்த்து, அமெரிக்க அரசாங்கம் 'அந்த ஏரியாவுக்குள் உள்நுழைய முனைவோர் சுட்டுத் தள்ளப்படுவார்கள்' என்று உடன் எச்சரிக்கை செய்ததாம். அந்த அளவிற்கு அந்த இடம் பற்றிய இரகசியத்தை அமெரிக்கா பேணி வருகிறது. அங்கு என்னதான் நடக்கிறது என்பது பற்றி அறிய அமெரிக்க மக்கள் தலையைப் பிய்த் தபடி காத்திருக்கிறார்கள். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 'ஹிலாரி கிளிண்ரன்' அம்மையார் தான் ஜனாதிபதியாய் வந்தால் ஏரியா 51 பற்றிய இரகசியத்தை வெளியிடுவேன் என்று தனது தேர்தல் பிரச்சாரத்தில் முன்பு வெளியிட்டிருந்தார்.

மொத்தத்தில் அமெரிக்க மக்களுக்கு என்று மட்டுமல்லாமல், உலக மக்கள் அனைவருக்குமே வெளிக்கிரகவாசிகளின் தொடர்பு பற்றிய செய்திகள் மறைக்கப்பட்டு வருவது மட்டும் நிச்சயம். வருடா வருடம் உலகில் காணாமல் போவோரில் பலர் வெளிக் கிரகவாசிகளால் கடத்தப்படுகிறார்கள் என்று கருதப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு நூற்றுக்கணக்கானோர்களுடன் காணாமல் போன மலேசிய விமானத்தைக் கூட வெளிக் கிரகவாசிகள்தான் கடத்திப் போனார்கள் எனும் கருத்தும் பரவலாகச் சொல்லப்பட்டு வருகிறது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய அதிசயமாக 'ஏலியன்ஸின்' தொடர்புதான் இருக்கப்போகிறது என்பது மட்டும் நிச்சயம். இது பற்றி முன்பும் ஒருமுறை நான் சொல்லியிருக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அவங்களும் வெள்ளை வானிலதான் வருவாங்களோ?... ஹி..ஹி..**

**2. கேள்வி:-** உலகம் போகிற போக்கைப் பார்த்தால் நன்மை என்பதே இனி இல்லாமல் போய்விடும் போல் தெரிகிறதே!

**பதில்:-** பயப்படாதீர்கள்! அப்படி முழுவதும் தீமைமயப்பட்ட உலகம் ஒருநாளும் வராது என்பது மட்டும் நிச்சயம். ஒன்றை மறந்து போகாதீர்கள். இன்றைக்கும் சமுதாயத்தில் தீயவற்றைவிட நல்லவைதான் அதிகமாய் இருக்கின்றன. 'உங்களுக்கென்ன பைத்தியமா? ஊடகங்களிலும் செய்திகளிலும் அடிபடும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற விடயங்களைப் பார்க்காமல் நீங்கள் பேசுகிறீர்கள்போல' என்று நீங்கள் கூக்குரல் இடுவதை உணரமுடிகிறது. ஆனால் இப்போதும் நான் உறுதியாய்ச் சொல்கிறேன், இன்றைக்கும் சமுதாயத்தில் நல்லியல்புகள்தான் அதிகமாய் இருக்கின்றன என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. பெரிய வெள்ளைத் துணியில் விழுந்த ஒரு கறுப்புக் கறை எல்லார் கண்களுக்கும் உடனே தெரியும். பெரிய இடத்தைப் பிடித்திருக்கும் வெண்மையை விட சிறிய புள்ளியாய் இருக்கும் கறைதான் கண்களுக்குத் தெரிவது போல, சமுதாயத்தில் பெரிதாய் இருக்கும் நன்மைகள் கண்களுக்குத் தெரிவதில்லை. ஊடகங்களும் அவற்றைத் தெரிவிப்பதும் இல்லை. நாமும் கெட்டவைகளைத்தான் தேடிப் பார்க்கிறோம். ஊடகங்களும் கெட்டவைகளைத்தான் 'போக்கஸ்' செய்கின்றன. அதனால் உலகமே கெட்டுவிட்டாற்போல் ஒரு பொய் உணர்வு தோன்றுகிறது. உலகம் நன்றாய்த்தான் இருக்கிறது. உலகில் நன்மையை விடத் தீமை என்று அதிகரிக்கிறதோ, அன்றைக்கே இயற்கை இந்த உலகத்தை அழித்துவிடும். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் நல்லவராய் இருங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'எல்லோரும் நல்லவரே'!? ஹி..ஹி..**

**3. கேள்வி:-** எதிர்க்கட்சிகள் ஒருவாரத்திற்குப் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கப் போகின்றனவாமே!

**பதில்:-** பார்த்தேன்! ஆளுந் தரப்பினரும் சரி, எதிர்த் தரப்பினரும் சரி மக்கள் மத்தியில் தங்களது இருப்பைப் பதிவு செய்ய முயற்சிக்கின்றனரே தவிர, வேகமாய்ச் சரிந்து கொண்டிருக்கின்ற நம் தேசத்தின் இருப்பைப் பற்றிக் கவலைப்படுவதாய்த் தெரியவில்லை. இந்த நாடகங்களால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * போய்க் கிழிச்சிட்டினம். இனிப் போகாமல் கிழிக்கப் போகினமாக்கும். ஹி..ஹி..**

**4. கேள்வி:-** குடை, கொடி, ஆலவட்டத்துடன் ஆரவாரமாய் வருகை தந்த புதிய பிரதமர் ரணில் இப்போது என்னதான் செய்து கொண்டிருக்கிறார்?

**பதில்:-** அவர் சும்மா இருப்பதாய் உங்களுக்கு யார் சொன்னது? இப்போது அவர்தானே நாட்டு மக்களுக்கு 'ஞானக்கா'வின் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். 'ஞானக்கா' நடக்கப் போகும் நல்லது, கெட்டது இரண்டும் சொல்லியிருப்பார். நம்ம 'ஞானண்ணா' நாட்டுக்கு நடக்கப்போகும் கெட்டதை மட்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * அழிவைச் சொல்வதற்கு அறிஞன் வேண்டுமா?**

(10ஆம் பக்கம் பார்க்க)

# சமூக மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவும் வகையில் யாழ். பல்கலை தொழில்சார் நிறுவன புரிந்துணர்வு!





இரு முன்னணி தொழில் சார் நிறுவனங்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடத்தின் நிதி முகாமைத்துவத்துறை புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளது.

மனித வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கும் திருக்குறளை வடித்த வள்ளுவப்பெருந்தகை அதனை அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலாக வகுத்து அவை மூன்றுமே வாழ்வியலுக்கான அடிப்படைகள் என வரையறுக்கின்றார். மேலும் அறத்தையும் இன்பத்தையும் எளிதாக எட்டுவதற்கு தகுந்த நெறிமுறையில் பொருளை ஈட்டுவதே வழிமுறையாகும் என பின்வரும் குறளில் பொய்யாமொழிப் புலவர் சுட்டுகின்றார்.

**‘எண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்**
**பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு’**

இங்கு பொருள் என்பது நிதி அல்லது செல்வம் என்பதைக் குறிக்கின்றது. இத்தகைய நிதியின் பெருமையை அறிந்தமையால் போலும் முகாமைத்துவம்சார் மாணவர்கள் மத்தியில் நிதிசார் கற்கை நெறிகளைக் கற்பதற்கான ஆர்வம் அதிகளவில் காணப்படுகின்றது.

மாணவர்களின் இந்த ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிக பீடத்தின் கீழான நிதி முகாமைத்துவத் துறை சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மாணவர்களது சிறப்புக் கற்கை நெறித் தெரிவின்போது துறையின் ஒதுக்கப்பட்ட இயலளவிலும் பார்க்க அதிக



மாணவர்கள் நிதிசார் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ வணிக பீடத்தில் 2010 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மீள் கட்டமைப்பின் போது உருவாக்கப்பட்ட நிதி முகாமைத்துவத் துறை மாணவர்களதும் சமூகத்தினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக பல்வேறு துறைசார் நிறுவனங்களுடன் இணைந்து மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் பல்வகைப்பட்ட மேம்பட்ட சேவைகளை வழங்க முனைகின்றது. அதன் ஓர் அங்கமாக இலங்கையின் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையில் பாரிய பங்காற்றுகின்ற இலங்கை வங்கியாளர் நிறுவனம் (Institute of Bankers of Sri Lanka) மற்றும் இலங்கையிலுள்ள பட்டய நிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனம் (Chartered Financial Analyst (CFA) Institute in Sri Lanka) ஆகிய அமைப்புக்களுடன் கரம் கோர்க்கும் முகமாக அவ்வமைப்புக்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதி முகாமைத்துவத்துறை 2022 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 28 ஆம் திகதியன்றுபுரிந்துணர்வுஉடன்படிக்கைகளை (Memorandum of Understanding) கைச்சாத்திடுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயற்றிறன் மிக்க துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசாவின் வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவ வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசனது நெறிப்படுத்தலின் கீழ் நிதி முகாமைத்துவத் தலைவர் பேராசிரியர் ரதிராணி யோகேந்திரராஜா மற்றும் நிதி முகாமைத்துவத்துறை சமூகத்தினரது சிறப்பான முயற்சிகள் மூலம் இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வங்கியாளர் நிறுவனம் வங்கியியல் மற்றும் நிதியியல் துறையிலான அறிவு மற்றும் திறன் விருத்தியில் முன்னோடி நிறுவனமாகப் பாரிய பங்களிப்பை நல்கிவருகின்றது. 1964 ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியால் வங்கியாளர் பயிற்சி நிறுவனம் உருவாக்கப்பட்டு பின்னர் இது 1979 ஆம் ஆண்டில் 1976 ஆம் ஆண்டு 26 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை வங்கியாளர் நிறுவனமாக கூட்டிணைக்கப்பட்டது.

வங்கியியல் நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் ஊழியர்களுக்கு வங்கியியல் மற்றும் பிறநிதிசார் துறைகளில் பயிற்சிகளை வழங்குதல், துறைசார் பரீட்சைகளை நடத்தி சான்றிதழ்களை வழங்குதல், வங்கியியல் சார் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்துதல் போன்ற பணிகளை இந்த நிறுவனம் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

பட்டயநிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனம் அமெரிக்காவைத் தலைமையகமாகவும் உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் அங்கத்துவ நிறுவனங்களைக் கொண்டும் செயற்பட்டு வருகின்றது. பட்டய நிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனத்தின் உலகளாவிய வலைப்பின்னலில் இலங்கை 2001 ஆம் ஆண்டு உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டது. இது முதலீடுகள் சார் தொழில் நிபுணர்களது அமைப்பாக விளங்குவதுடன் முதலீடுகள் சார் தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு இந்தத் தொழில் சார் ஒழுக்க நியமங்களின் உயர்வான தன்மையைப் பேணுதல், இத்துறைசார் கல்வியை மேம்படுத்துதல், தொழில்சார் திறமையை உயர்த்துதல் ஆகிய அம்சங்களில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

குறிப்பாக இலங்கையின் வளர்ந்து வரும் மூலதனச் சந்தை அமைப்புக்களுக்கு நவீன தொழிநுட்ப ரீதியான பயிற்சிகள் மற்றும் புதிய மென்பொருள் அறிவை விருத்தி செய்தல் என்பனவற்றில் இந் நிறுவனத்தின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

இத்தகைய வாண்மைமிக்க தொழில் சார் தகைமையைப் (Professional qualification) பெற்றுக்கொள்ளும் எவரும் உள்ளூரிலும் வெளியூரிலும் இலகுவாக தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்துணை சிறப்பு மிக்க நிறுவனங்களும் நிதி முகாமைத்துத் துறையும் கைச்சாத்திடும் உடன்படிக்கைகள் மூலமாக பல்கலைக்கழக மாணவர்களும் பிற மாணவர்களும் சமூகத்தினரும் பல்வேறு நன்மைகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக மேற்படி இரு நிறுவனங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் நிர்வாகமாணி நிதி முகாமைத்துவ சிறப்புக்கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களில் அதிகூடிய தர புள்ளி சராசரி (Grade Point Average) பெறும் மாணவருக்கு அவர்களது பட்டமளிப்பு விழாவின் போது தங்கப்பதக்கங்களை வழங்கவுள்ளன.

இதே போன்று மேற்படி கற்கை நெறியில் மூன்றாம் வருடம் மற்றும் நான்காம் வருட பரீட்சைகளில் உயர்வான பெறுபேற்றைப் பெறும் மாணவர்களுக்கு விருதுகளையும் காசுப் பரிசில்களையும் வழங்கவுள்ளன. இது மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கான சிறப்பம்சமாகும். மேலும் மேற்படி இரு நிறுவனங்களும் நிதி முகாமைத்துவத்துறை மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளையும், சிறப்பு விரிவுரைகளையும் மேற்கொள்ளவுள்ளதுடன் இந்த மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சிக்கான நிறுவன தெரிவுகளிலும்துணைபுரியவுள்ளன. அத்துடன் நிதி முகாமைத்துவத்துறையின் பாடத்திட்ட மீளாய்வுகளின் போது தேவையான தொழில்சார் நிபுணத்துவ ஆலோசனை சேவையையும் வழங்கவுள்ளன. அத்துடன் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் சேவைகளையும் இந்த நிறுவனங்கள் வழங்கவுள்ளமை மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

குறிப்பாக நோக்குமிடத்து நிதி முகாமைத்துவத்துறையினருக்கும் இலங்கை வங்கியாளர் நிறுவனத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நிதி முகாமைத்துவத்துறைசார் மாணவர்கள் சலுகைக்கட்டண அடிப்படையில் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தால் வழங்கப்படும் கல்விசார் சேவைகளைப் பெறுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்த உடன்படிக்கை வாயிலாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த க.பொ.த. உயர்தர வணிகத்துறை மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் சந்தை செயற்பாடுகளும் அவர்களது திறன்களை விருத்தி செய்வதற்கான பிற பொருத்தமானசெயற்பாடுகளும்முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது எமது பிரதேச மாணவ சமூகத்துக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். மேலும் நிதிமுகாமைத்துவத்துறை, ‘வங்கியியலும் நிதியியலும் டிப்ளோமா’ கற்கைநெறியை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினூடாக வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமையுடன் விரைவில் இந்தக் கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதில் பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள்மற்றும்இலங்கை வங்கியாளர் நிறுவன துறைசார் வல்லுநர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே போன்று நிதி முகாமைத்துவத் துறைக்கும் இலங்கை பட்டய நிதிப்பகுப்பாய்வாளர் நிறுவனத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையும் சில விசேட பிரத்தியேகமான அனுகூலங்களைக் கொண்டுள்ளது. நிதி முகாமைத்துவத்துறை மாணவர்களது திறன் மேம்பாடு கருதி இணைந்த அறிவுப்பகிர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர். குறிப்பாக மூலதனச் சந்தை தொடர்பான அறிவுப்பகிர்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இவ்வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக எமது சமூக மட்டத்தில் நிதிசார் அறிவு மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு நிதிசார் குறுங்கால கற்கை நெறிகளை நிதி முகாமைத்துவத்துறையும் இலங்கைப் பட்டய நிதிப் பகுப்பாய்வாளர் நிறுவனமும் இணைந்து வழங்கவுள்ளதுடன் மேற்படி நோக்கத்தை அடைவதற்காக இரு தரப்பும் இணைந்து சர்வதேச நிதியியல் சுதந்திர விழிப்புணர்வு தினத்தை சித்திரை மாதம் 25 ஆம் திகதி ஆண்டு தோறும் பல்வேறு நிதிசார் விழிப்புணர்வு செயற்பாடுகளுடன் முன்னெடுக்கவுள்ளனர். இது சமூகமட்டத்தில் ஆற்றப்படும் சிறந்த சேவையாக அமையும். மேலும் பட்டய நிதிப்பகுப்பாய்வுக் கற்கைநெறியை மேற்கொள்ள விரும்பும் மாணர்களுக்கு புலமைப்பரிசில்வசதிகளையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இந்த வகையில் இலங்கையின் வங்கியியல் துறையின் மேம்பாட்டுக்காக பாரிய பங்காற்றும் இலங்கை வங்கியாளர் நிறுவனமும் நிதி முகாமைத்துவத்துறையும் இணைந்து செயலாற்ற ஆரம்பிப்பது சிறப்பானதாகும். குறிப்பாக நிதி முகாமைத்துவத்துறையின் பழைய மாணவர்கள் இலங்கையின் பல்வேறு வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் முகாமையாளர்களாகவும் பிற பதவிகளிலும் சிறப்பாக செயலாற்றி வருகின்ற அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் பல்வேறு பதவி நிலைகளையும் அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

எனவே இந்த இணைவு மேலும் பல வளர்ச்சிகளுக்கான முதற்படியாக அமையும். இதே போன்று இலங்கைப் பட்டய நிதி ஆய்வாளர் நிறுவனமும் இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களது நிதி முகாமைத்துவம்சார் துறைகளுடன் இத்தகைய உடன்படிக்கைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் மூலதனச் சந்தை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி வரும் பட்டய நிதி ஆய்வாளர் நிறுவனத்துடனான உடன்படிக்கை மூலம் மாணவர்கள் மட்டுமன்றி இப் பிரதேச சமூகமும் பல்வேறுநன்மைகளைப்பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -




**அங்கம் 45**

'ராவய' பத்திரிகையின் விக்டர் ஐவன் சமர்ப்பித்து இருக்கும் யோசனைகள், காலிமுகத்திடலில் பேசப்பட்ட தார்மீங்கள் யாவும், இனவாதிகளையும் தேசத் துரோகிகளையும் துரத்தி, நாட்டு மக்கள் யாவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் எனவும், மக்களை மையப்படுத்திய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றன.

ஶ்ரீலங்காவின் எல்லாத் தரப்புகளிலிருந்தும் வெளிப்படுத்தப்படும் தார்மீகங்களை ஆராய்ந்தாலும், அவை நாட்டில் உள்ள மக்கள் இனப் பாகுபாடின்றி, சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றனவே ஒழிய, இன உறவுகளைச் சீராக்கும் திட்டங்களைப் பற்றி பேசவில்லை.

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் பாதையில் அதனை ஓர் அங்கமாக மட்டுமே கருதுகிறார்கள். அன்றில் பொருளாதாரம் நிவர்த்திசெய்யப்பட்டால் உறவுகள் சீரடைந்து விடும் என்று எண்ணப் பாங்கும் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஜே.ஆர். ஜெயவர்தனா ஜனாதிபதி பதவிக்கு வந்து, இந்தியாவுடன் முன்னெக்கப்பட்ட இணக்கப் பேச்சுதைகளில் எல்லாம் 'ஶ்ரீலங்கா என்ற நாடு இங்கு வாழும் எல்லா மக்களுக்கும் சொந்தமானது, இங்கு எவரும் எங்கும் போய்க் குடியிருக்கலாம், தொழில் செய்யலாம், எந்த விதமான தடைகளும் வேற்றுமைகளும் இன்றி வாழலாம், கொழும்புப் பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்களைப் பாருங்கள், எங்கும் பரந்து இருக்கும் முஸ்லிம்களைப் பாருங்கள், ஆனால் சிங்கள மக்கள் வடக்கிலும், கிழக்கிலும் குடியேறுவது தவறு என்ற வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, இந்த நாட்டின் எந்தவொரு பகுதியும், எந்த ஓர் இனத்துக்கும் சொந்தமும் முன்னுரிமையும் கொண்டது அல்ல, அது எல்லோருடையதும் நாடு' என்ற தார்மீகம் தெரிவித்தார்.

ஆனால், அவர் தான் பொதுவெளியில் வழிகாட்டிய 'தர்மிஷ்டர்' என்ற போர்வையின் கீழ் மற்றைய இன மக்கள் உள்வாங்கப்பட்டு தார்மீகம் கொண்ட நாடு உருவாக்கப்படவில்லை. மாறாக, பேரினவாதம் அவராலும் அவரது அரசியல்நண்பர்களாலும்வளர்க்கப்பட்டன.

கடைசியில், வடக்குக் கிழக்கு இணைந்த நிலப்பரப்புகள் தமிழ், முஸ்லிம் மக்களின் பரம்பரையான வாழிடம், அவற்றைத் தனித்துவமாக நிர்வகிக்க அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற யதார்த்தத்தை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் அவரே ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

அப்படி ஏற்றுக் கொண்ட ஒப்பந்தத்தையும் அதன் சரத்துக்களையும் பார்வைகளுக்காகவேனும் நடைமுறைப் படுத்துவார் என பாவனை காட்டி, அடியிலிருந்து வேரறுத்து அவர் நடத்திய அரசியல் கலாச்சாரம் அவரைத் தொடர்ந்து வந்த தலைவர்களாலும் முன்னெடுக்கப்



பட்டது. இப்போது அது வெளிப்படையான முழுப் பேரினவாதமாக மாறி, தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய தான் சிங்கள, பௌத்த மக்கள் தேடிய தலைவர் என்றும், இது இன்று 'அப்பே ரட்ட' (அதாவது தங்களது நாடு ) என்றும் பெரும்பான்மைத் திமிரைப் பிரதிபலிக்கிறார்.

தொடர்ந்து வந்த அரசுகள் தமிழ் மக்களை அந்நியப்படுத்தி, அவர்களது உரிமைகளை அழிக்கச் செய்த செலவுகளும், அதனூடாக பெற்ற ஊழல் ஆதாயங்களும், நாடு வங்குரோத்து நிலைக்கு வந்ததும், அந்த கட்டங்களில் பெரும்பான்மை மக்களின் பல தரப்பினர் இப்போது தார்மீகம் பேசுகிறார்கள்.

அப்படி இருந்தும் அதிகாரங்களில் இருப்பவர்களின் பேரினவாத மிடுக்கும், துடிப்பும், ஆணவமும் இன்னும் – இன்றும் – மழுங்கிப் போனதாகத் தெரியவில்லை.

'சிங்கள, பௌத்த மக்களின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு, குருந்தூர் மலையில் புத்தர் சிலை வைப்பதற்கான எதிர்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவது விடுதலைப் புலிகளின் முகவர்களான கூட்டமைப்பினரால்' எனப் பழைய கடற்படைத் தளபதியும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினருமான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். அது மாத்திரமல்ல, 13ஆம் திருத்தச் சட்டத்தின் அமுலாக்கங்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியின் அதிகாரங்கள் அவசியம், அந்த நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட்டால் இங்கு சமஷ்டி அரசியல் உருவாகிவிடும் என்ற பழைய பயத்தையும் பீதியையும் அவர் முன் நிறுத்துகிறார்.

இப்போது பல பகுதிகளில் பெரும்பான்மையினர் தாங்களாகவே முன்வந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகள் தர வேண்டும் எனத் தார்மீகம் பேசுகிறார்கள். எனினும் அவற்றுக்கு மேல், %வடக்குக் கிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள், அந்தப் பகுதிகளில் அவர்கள் அது தங்களது தேசம் என்ற கட்டமைப்பில் வாழ்ந்தார்கள், அதில் அவர்களுக்கு முன்னுரிமை உண்டு, சிங்கள மக்கள் அப்பகுதிகளில் அரசாங்கங்களால் குடியேற்ற படுவதும் குருந்தூர் மலை போன்ற மதத் திணிப்புகளுமே இன உறவுகளுக்கு தேவையற்றவை' என்ற வாதங்கள் வைக்கப்படுவதில்லை.

அவர்களை (சிறுபான்மையினரை) ஒரு நாட்டிற்குள் சம உரிமைகள் கொண்ட மக்களாக வாழ வைக்க வேண்டும் என்ற தார்மீகதான் வெளிப்படுகிறது.

ஆக, தேர்தல்கள் வரலாம், கட்சிகள் அரசுகளை அமைக்கலாம், பதவிக்கு வரும் நோக்கங்களில் அவை எவ்வளவு தார்மீகமாகப்பட்டாலும் அவர்களது பேரினவாத மரபணுக்கள் தமிழ் மக்களின் தனித்துவமான உரிமைகளையோ அபிலாசைகளையோ ஏற்று நடைமுறைப் படுத்தப் போவதில்லை.

பின்னாளில் ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்தனா முன்னர் கண்டி யாத்திரையை, பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துச் சென்ற வேளையில் பேசியவற்றை ஜனாதிபதி கோட்டாபய இன்று சொல்லும் தொன்யைச் சிறிது குறைத்து இவர்கள் சொல்லுகிறார்கள். அவ்வளவே.

ஜனாதிபதியின் புலன்விசாரணையாளர்கள் 'கோட்டா கோ ஹோம்' கிளர்ச்சி–யாளர்களுக்கு எதிராக ஏவப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் மூலம் இதற்குப் பின்னணியில் இருந்தவர்கள் கோட்டா அரசைக் கவிழ்ப்பதற்குத் திட்டமிட்டவர்கள், அவர்கள் யார் என்பதிலும் பல அரசியல் செய்திகள் வெளிவருகின்றன. ஶ்ரீலங்காவில் இந்தியாவும் மேற்குலக நாடுகளும் ஆளுமைகளை மேற்கொள்ளுகின்றன என இடதுசாரிகளுக்கு ஊக்கம் கொடுத்து சீனா அவற்றைத் தூண்டி விட்டது என அவர்களில் ஒரு சாரார் ஆதாரப்படுத்த எடுத்த எடுப்பிலேயே அவற்றுக்கு ஆதரவுகள் அமெரிக்காவிடமிருந்தும் பிரித்தானியாவிடம் இருந்தும் வந்தன. அமெரிக்க தூதுவர் கூட யாழ்ப்பாணத்துக்கு விரைந்து பலரைச் சந்தித்து, அவர்களது நிலைப்பாடுகள் என்னவென்று விசாரித்தார். சுமந்திரனும் கூட தமிழ் இளைஞர்கள் முன் வந்து இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

ஆனால் இந்தியா ஆதரவும் எதிர்ப்பும் தெரிவிக்காமல், பல இடங்களில் தேடி ஆமைபோல ஆரவாரமின்றித் தனது முட்டைகளை இட்டுக் கொண்டிருந்தது.

பொது நிறுவனங்களை கண்காணிக்கும் நாடாளுமன்ற குழுவான 'கோப்'பின் முன்னால்வரும் தகவல்களின்படி தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ள – அதானி குழுமம் ஈடுபடும் – திட்டங்கள் யாவுமே காலிமுகத்திடல் போராட்டம் தொடங்குவதற்கு பல மாதங்களுக்கு முன்னரே, இந்திய வெளியுறவு அமைச்சர் வெளியுறவு அதிகாரிகள் மட்டுமல்ல, ஆளும் கட்சிகளின் பெரும்புள்ளிகள் மோடியின் வழிநடத்தலில் சிறிலங்காவுக்கு வந்து ஏற்படுத்திய பேச்சுவார்த்தைகளில், ராஜபக்ஷ தரப்புக்கள் தாங்கள் எதிர் கொள்



ளும் கடன் தொல்லைகளில் தங்களை மீட்டுக்கொள்ள ஏற்படுத்திக்கொண்டவையாகத் தெரிகின்றன.

முன்னர் பல அரசியல் ஆர்வலர்களும் ஊடகவியலாளர்களும் யாழ்ப்பாணத்தை அடுத்த தீவுகளிலும் பேசாலையிலும் அமையவிருக்கும் மாற்று மின் உற்பத்தி நிலைய திட்டங்கள் சீனாவுக்குக் கையளிக்கப்பட்டு விட்டன எனவும், இவற்றால் இந்தியாவின் தென்பகுதிப் பாதுகாப்பு பலவீனப்படுத்தபடுகின்றது எனவும் அறுதியிட்டுச் சொன்னாலும், அவை பற்றிய புதிய இணக்கங்கள் சத்தம் சந்தடியின்றி இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்டு விட்டன.

ரணில் பிரதமரானதற்கான சூட்சுமங்களையும் இங்கு தான் நாம் பார்க்க வேண்டும்.

**(வளரும்)**

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் கறுப்பு சந்தை வியாபாரிகளால் இளைஞனின் உயிர் பறிக்கப்பட்டுள்ளது



## அங்கஜன் குற்றச்சாட்டு

கறுப்பு சந்தை வியாபாரிகளாலும், அடாவடி கும்பல்களாலும் இன்று ஓர் இளைஞனின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகளும், மோதல் நிலைகளும் இடம்பெறுகின்றன என முறைப்பாடுகள் முன்வைக்கப்படும் சூழலில் இந்த மரணம் அதன் தீவிர நிலையை வெளிப்படுத்தியுள்ளது.

இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழக்கூடாது என யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில், உயிரிழந்த இளைஞனுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தனது உத்தியோகபூர்வ முகநூலில் நாடாளுமன்ற உறுப்பினர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

எனது ஆதரவாளரும், ஜே – 186 உடுவில் வடக்கு கிராம இணைப்பாளருமான செல்வரத்தினம் பிரசாந்த் இறைபதம் அடைந்த செய்தி மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோலுக்காக காத்திருந்தவேளை ஏற்பட்ட மோதலில் தாக்கப்பட்ட இவர், சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

செல்வரத்தினம் பிரசாந்த் துடிப்பான ஆற்றல் மிகுந்த ஓர் இளைஞராக எனது அரசியல் பணிகளில் பங்காற்றியுள்ளார்.

நேர்மையோடும் அன்போடும் பழகும் குடும்ப சூழலில் வளர்ந்த இளைஞனை இன்று நாம் இழந்துவிட்டோம். அண்மையில் உடுவில் வடக்கு கிராமத்துக்கு நாம் சென்றபோது, அக்கிராம மக்களின் தேவைகள், பிரச்சினைகள் தொடர்பாகத் தெளிவான விளக்கங்களை முன்வைத்திருந்தார்.

அவரது சமூகம் மீதான பார்வையும், மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையும் எனக்கு எப்போதும் பிடித்தமானவை. ஓர் ஆற்றல் மிகுந்த, சிறந்த அரசியல் பார்வை கொண்ட ஓர் இளைஞன் இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் உயிரிழந்துவிட்டார்.

இந்த மரணம் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாதது. மனிதநேயத்துக்கு விரோதமான இந்த செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கறுப்பு சந்தை வியாபாரிகளாலும், அடாவடி கும்பல்களாலும் இன்று ஓர் இளைஞனின் உயிர் அநியாயமாக பறிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மோசடிகளும், மோதல் நிலைகளும் இடம்பெறுகின்றன என முறைப்பாடுகள் முன்வைக்கப்படும் சூழலில் இந்த மரணம் அதன் தீவிர நிலையை வெளிப்படுத்தியுள்ளது. இத்தகைய நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழக்கூடாது.

யாழ் மாவட்ட அரச நிர்வாகத்தின் கீழ் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் செயற்படவுள்ள நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பதிவு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு மேலதிகமாக எவரையும் தம்மோடு வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது.

முறையான வரிசைகளை பொலிஸாரும், எரிபொருள் நிரப்பு நிலையத்தினரும் கடைப்பிடிக்க வேண்டும்

பங்கீட்டு முறையை மீறுபவர்கள், வரிசை முறையை மீறுபவர்கள், திட்டமிட்டு குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் மீது பக்கச்சார்பில்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்களுக்கான எரிபொருள் விநியோகத்தில் இடம்பெறும் முறைகேடுகள் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியானதும் கடுமையானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை முன்வைக்கிறேன்.

எரிபொருள் தேவையோடு பல கஷ்டங்களோடு வாழும் மக்கள் அதனைப் பெறுவதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அச்சமடைந்த மனநிலையோடு வரும் நிலமை இனிவருங்காலங்களில் இருக்க கூடாது என வலியுறுத்துகிறேன்.

யாழ்ப்பாண மக்களுக்கான எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்காக 45 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இயங்குகின்றன.

தற்போதைய நெருக்கடி நிலையில் மாவட்டத்துக்கு கிடைக்கும் எரிபொருளை பங்கிட்டு அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

இந்தப்பணியை செய்யத் தவறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும், ஒத்துழைப்பு தர மறுத்து அடாவடியில் ஈடுபடும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்க அதிபர், பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். – என்று உள்ளது.

# நான்கு லட்சம் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் 70 ஆயிரம் பேர் மாத்திரமே நாட்டைவிட்டு வெளியேறினர்

ஜனவரி மாதம் முதல் 4 லட்சம் பேருக்கு கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் அவர்களில் 70 ஆயிரம் பேர் மாத்திரமே வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனக் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பெறப்பட்ட கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையில் 20 வீதத்துக்கும் குறைவாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் நாளாந்தம் வழங்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையும் தற்போது 2 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் ஆயிரம் கடவுச்சீட்டுகளும் சாதாரண சேவையின் கீழ் 800 கடவுச்சீட்டுகளும் வழங்கப்படுகின்றன என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு வந்து விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாதவர்களுக்கு வேறு திகதி வழங்கப்படுவதுடன், அவ்வாறு திகதிகள் வழங்கப்பட்ட சுமார் 600 பேரின் கடவுச்சீட்டுகள் நாளாந்தம் வழங்கப்படுகின்றன எனவும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது 35 லட்சம் முதல் 45 லட்சம் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் இருக்கின்றனர் எனவும் கடந்த ஏப்ரல் மாதம் முதல் பார்வையாளர்கள் தங்கள் கடவுச்சீட்டை நடைமுறைப்படுத்துவதில் அதிக ஆர்வம் இருப்பதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ள போதிலும் கடந்த வாரத்தைவிட இந்த வாரம் வாடிக்கையாளர் வருகையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும் எரிபொருள் நெருக்கடி காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலக அதிகாரிகள் பணிக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மின் கட்டணப் பட்டியல்களை வழங்குவதில் மீண்டும் சிக்கல்

கடதாசி தட்டுப்பாடு மற்றும் மின்சார சபை எதிர்நோக்கியுள்ள நிதிப்பிரச்சினை காரணமாக மின் கட்டண பட்டியலை வழங்குவதில் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் மாதாந்த மின் கட்டணப்பட்டியல் வழங்கப்படவில்லை என மின்சார சபையின் பாவனையாளர் இணைப்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நாலக்க ஜீவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாவனையாளர்களுக்குத் தற்போது வழங்கப்படும் பாரிய நீர் கட்டண பட்டியலுக்கு பதிலாக சிறியளவான பட்டியலை வழங்குவது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் குழுவொன்றின் ஊடாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பாட்டும் நானே?...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**5. கேள்வி:-** டான் ரி.வியில் அங்கஜனின் பேட்டி எப்படி?

**பதில்:-** அவரது கொள்கை சரியா? பிழையா? என்பதைக் காலம்தான் முடிவு செய்யவேண்டும். ஆனால் அன்றைய பேட்டியில் தன்னுடைய பக்கத்தை ஆளுமையுடன் தெளிவுபட எடுத்துச் சொன்னார்.

* ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியால் நான் வெற்றி பெறவில்லை. என்னால்தான் இங்கு சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றது.

* மற்றைய தமிழ்க்கட்சிகள் வருங்காலத்தில் அடையப்போகும் வெற்றிக்காய்ப் பாடுபடுகின்றன. நான் எங்கள் மக்களின் நிகழ்கால வெற்றிக்காய்ப் பாடுபட நினைக்கிறேன்.

- எனும் கருத்துப்பட அவர் சொன்னவற்றுள் சிலவற்றை ரசிக்க முடிந்தது. நமது தமிழ் அரசியல்வாதிகளில் ஆளுமை மிக்க இளைஞராய் அந்தப் பேட்டி அவரை ஓரளவு இனங்காட்டியது நிஜம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் வாயால் 'பிரம்மரிஷி' பட்டம் என்றால் சும்மாவா?**

# ஹற்றனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சமையல் எரிவாயு மீட்பு!

கொழும்பில் கறுப்பு சந்தைக்கு அனுப்புவதற்காக ஹற்றனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சமையல் எரிவாயுவை பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் இணைந்து வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸாரும், நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளும் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் பஸ் தரிப்பிடத்துக்கு பின்பகுதியில் உள்ள 'கொரியர்' சேவை வழங்கும் நிலையமொன்றிலிருந்தே இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன.

2.5 கிலோ எடையுடைய 8 லாப் காஸ் சிலிண்டர்களும், 12.5 கிலோ எடையுடைய 12 லாப் காஸ் சிலிண்டர்களும் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொழும்புக்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கும் வியாபாரம் இடம்பெற்று வந்துள்ளது. இது தற்போது அம்பலமாகியுள்ளது. – என்று பிரதேச மக்கள் குறிப்பிட்டனர்.

குறித்த கொரியர் சேவை வழங்கும் நிறுவனத்துக்கு புதன்கிழமை வெற்று சிலிண்டர்கள் கொண்டு வரப்பட்டுள்ளன, இந்நிலையில் வியாழன் எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர்கள் அங்கு மிகவும் சூட்சுமமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்த காட்சிகள் அப்பகுதியில் இருந்த சீ.சீ.டீ.வீ கமராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் ஹற்றன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரும், நுகர்வோர் அதிகார சபையினரும் சம்பவ இடத்துக்கு வந்து, சிலிண்டர்களை கைப்பற்றினர்.

தமது நிறுவனத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு வழங்கவே எரிவாயு வைக்கப்பட்டிருந்தது என நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறியுள்ளார். எனினும், அவரின் கூற்று பொய்யென தெரியவந்ததையடுத்து, பொலிஸார் சிலிண்டர்களை கொண்டு சென்றனர். மேற்படி நபருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்படும் என நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

'எமக்கு கூப்பன் வழங்கப்பட்டாலும் எரிவாயு வழங்கப்படுவதில்லை. இன்னமும் வரிசையில் காத்திருக்கின்றோம். ஆனால் இவர்களுக்கு எப்படி எரிவாயு கிடைக்கின்றது. கறுப்பு சந்தை வியாபாரிகளுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.' – என மக்கள் வலியுறுத்தினர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2022இல் வெளியிடப்பெற்றது.